Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

# பெ. தூரன் கவிதைகளில் சமூகச் சிந்தனைகள்

**நெறியாளர்**
முனைவர் கி.நந்தினி,
உதவிப் பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 16.

**சொ.தமிழ்செல்வி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
சேலம் - 16.
tamilselvi4622@gmail.com
8608853679

**ஆய்வுச் சுருக்கம்**

M. P. Periyaswamy Thooran is widely recognized as one of the most exceptional poets of the 20th century. His literary works have greatly impacted the Tamil literary world and beyond. It is evident that Thooran's poems reflect his deep concern for society's issues and his commitment to finding solutions through his works. His poems are not only a reflection of his artistic talent but also an expression of his social consciousness.

In his works, Thooran addresses a wide range of issues, including the need for unity among people of different backgrounds, the struggle against caste discrimination, and the plight of widowed women. He uses his poetry to express his deep concern for social justice, human dignity, and individual freedom. His poems are filled with vivid imagery, rich metaphors, and powerful language that convey his message effectively.

Overall, M. P. Periyaswamy Thooran's contribution to Tamil literature has been immense. His works continue to inspire generations and serve as a testament to his artistic talent and his commitment to social change.

## முன்னுரை

மனதில் தோன்றியதை மறைக்காமல் உணர்வோடும், தெளிவோடும் எடுத்துரைக்க ஒரு சிறந்த வழி உண்டெனில் அது கவிதையே ஆகும். உள்ள உணர்வுகளை படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி போன்றது கவிதை. இக்கவிதைக் கலையை போற்றாத கவிஞர்களே இல்லை. அந்த வகையில் ம.ப.பெரியசாமித் தூரன் அவர்கள் எளிமையின் உருவமாய் இனிமையின் வடிவமாக விளங்குகிறார். தான் கூற வருகின்ற கருத்தினை தெள்ளத் தெளிந்த நீரோடைப் போல கால ஓட்டத்திற்கு தகுந்தாற் போன்று உலகிற்கு உரைப்பதில் சிறந்து விளங்குகின்றார். இவரது கவிதைகளில் இயற்கை, காதல், வீரம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று என அனைத்து உணர்வுகளும் வெளிப்படுகின்றன. அந்த வகையில் இவருடைய கவிதைகளில் காணலாகும் சமுதாயச் சிந்தனைகளை எடுத்தாள்வதாக இவ்வாய்வு விளங்குகின்றது.

## சமுதாயம் - பொருள் விளக்கம்

மனிதன் ஒரு சமுதாய விலங்கு ஆவான். எந்தவொரு மனிதனும் தனித்து வாழ்தல் எளிதான காரியமன்று. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் யாரோ ஒருவரின் துணை இன்றியமையாததாகின்றது. ஒருவனும் ஒருத்தியும் இணைந்து இல்லறம் நடத்தும்போது அது குடும்பமாகின்றது. பல குடும்பங்கள் சேர்ந்து வாழுமிடம் ‘சேரி’ என்றழைக்கப்பட்டது. பல ‘சேரி’கள் கொண்டது ஊர் எனப்பட்டது. பல ஊர்கள் ஒன்றிணைந்தது சமுதாயமாகின்றது. எனவே சமுதாயம் என்பது மக்களின் கூட்டே எனலாம்.

## இலக்கியமும் சமுதாயமும்

ஒரு கவிஞனால் படைக்கப்படுகின்ற ஒவ்வொரு இலக்கியங்களும் சமுதாயத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளன. சமுதாயத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகளும் மாற்றங்களுமே ஒரு கவிஞனின் படைப்புகளுக்குப் பாடுபொருளாகின்றது. சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை எழுதப்பட்ட அத்துணை இலக்கியங்களும் சமூகத்தின் சாட்சிகளாகவும் சமூகத்தின் சாடல்களாகவுமே திகழ்கின்றன. ஆகவே இலக்கியமும் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பது தெளிவு.

## பெ.தூரன் பார்வையில் சமூகம்

பெ.தூரன் என்கிற பத்மபூஷன் ம.ப.பெரியசாமித்தூரன் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளரும் தமிழில் கலைக்களஞ்சியம் தொகுத்த அறிஞரும் ஆவார். பெ.தூரன் ஒரு நாட்டுப் பற்றாளராகவும், தமிழ்ப் புலவராகவும், கருநாடக இசை வல்லுநராகவும் அறியப்படுகிறார். மேலும் இவர் பல்வேறு நாடகங்கள், இசைப்பாடல்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியங்களும் எழுதியுள்ளார். இவர்

தன்னுடைய கவிதைகளில் பல்வேறு சமூக சிந்தனைகளையும், சிக்கல்களையும் எடுத்தாண்டுள்ளதுடன் அதற்கான தீர்வு காணவும் முற்படுகின்றார்.

**பொதுவுடைமை**

இப்பூவுலகினில் மானிடராய் அவதரித்த அனைவருமே பிறப்பால் சமம் என்பது அறியப்பட்டதே. எல்லோருக்கும் எல்லாமும் எவ்வித வேறுபாடுமின்றி கிட்டுதலே பொதுவுடைமை ஆகும். இந்த உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் எல்லார்க்கும் பொது என்ற எண்ணம் எல்லோருக்கும் என்று தோன்றுகிறதோ அன்றுதான் பொதுவுடைமை சமுதாயம் தோன்றும்.

**“அனைவருக்கும் பொது உரிமை**
**அனைவருக்கும் பொதுநீதி**
**அனைவருக்கும் பொதுவுடைமை**
**ஆக்கிடவே தோள் புடைப்பாய்”**[1]

என்ற கவிதை வரிகளில் கவிஞர் தூரன் அவர்கள் அனைவருக்கும் பொது உரிமையும், பொது நீதியும் கிடைத்தால் பொதுவுடைமை சமுதாயம் பிறக்கும் என்பதையும் அதற்கு அனைவரும் ஒன்றாக தோள் கொடுக்க வேண்டுமென்றும் விழைகின்றார். இதே கருத்தினை பாவேந்தர் பாரதிதாசனாரும்,

**“எல்லாரும் மக்களே யாவர் - இங்**
**கெல்லாரும் நிகராவர் எல்லாரும் உறவோர்**
**எல்லாருமு் ஒரு தாயின் செல்வர்”**[2]

என்ற கவிதை வரிகளின் வழி பொதுவுடைமை சமுதாயத்தை வலியுறுத்துவதை உணரமுடிகின்றது. பாரத தாயின் புதல்வர்களாகிய நாம் அனைவரும் சக மக்களிடம் வேற்றுமை பாராட்டாது சக உரிமை அனைவருக்கும் கிடைத்திட கைகோர்த்திட்டால் பிரிவுடைமை நீங்கி பொதுவுடைமை பிறந்திடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**கைம்பெண் நிலை**

பூவையரை பூமாதேவியாக மதித்துப் போற்றி வருகின்ற இத்தாய்திரு நாட்டில்தான் அவர்களுக்கு பல்வேறு இன்னல்களும் இழைக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் விண்வெளி வரை சென்று தங்களின் தடம்பதித்து வருகின்ற இதே பூமியில் தான் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டு வருகின்ற நிலையையும் நாம் காண்கின்றோம். இளம்வயதில் கணவனை இழந்த பெண்களே கைம்பெண் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இப்பெண்களின் துயரினைக் கண்டு கவிஞர் பெ.தூரன் அவர்கள்,

**“இளமைமணம் மாறாமுன்**
**இளங்குருத்துத் தோன்றாமுன்**
**உளம்வாழ்வில் ஒன்றாமுன்**
**ஒருமாயக் கனவெனவே**
**அடுப்பறையில் மறைந்தாயே…”**[3]

என்ற கவி வரிகளில் இல்லறவாழ்வு இதுவென்று அறியும் முன்னமே கணவனை இழந்து சமூகத்தின் சாடல்களுக்கு ஆளாகின்ற கைம்பெண்களின் அவல நிலையைக் கண்டு மனம் வருந்துகின்றார். பெண்கள் தெய்வமாக மதித்துப் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களை தலையில் தூக்கி வைத்து கொண்டாடவில்லை என்றாலும் அவர்களை சக மனிதர்களாக கருதி அவர்களின் உணர்வுகளை மதித்தாலே நாடும் வீடும் வளம் பெறும் நலம் தரும்

**சாதிப்பாகுபாடு**

விவசாயம் தொடங்கி இன்று விண்வெளி வரை அளவில்லா சாதனைகளையும், வெற்றிகளையும் மனிதன் அடைந்து வருகின்ற இதே இந்தியாவில்தான் இனவெறி, சாதி வேற்றுமை, மதச்சார்பு போன்றவற்றால் பல்வேறு கலவரங்களும் உயிர்ச்சேதங்களும் இன்றும் நிலவி வருகின்றன. ‘காக்கை குருவியும் எங்கள் சாதி’ என்று பாடிய இதே பாரத தேசத்தில்தான் உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்று பாகுபாடு காட்டுகின்ற நிலையும் உள்ளது. இச்சாதிப் பாகுபாட்டின் கொடுமையை கவிஞர் அவர்கள் ஒரு கவிதையில்,

**“தாயின் கோயிலில்**
**தாசன் நுழைவதோ?**
**அழுக்கே மேனி**
**அரைக்காசில்லை**

ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

**தாயின் திருமுன்**
**போவதா அவனும்?**
**கோயின் காவலர்**
**கோடி நூற்சுவடிகள்**
**அடுக்கிமுன் வைத்தனர்**
**அடித்துத் துரத்தினர்"[4]**

என்ற கவிதை வரிகளில் கீழ்குலத்தைச் சார்ந்த ஒருவன் கோயிலுக்குள் நுழைய, அவனை உயர்ந்தோர் எனக் கூறி கொள்ளுகின்ற மனித மிருகங்கள் அடித்துத் துரத்துகின்ற அவலத்தை எடுத்தியம்புகின்றார். வசதி இல்லாதவன் புறத்தால் தூய்மை இல்லாதவனாயினும் அவன் தூய்மை உடையவனே. ஆனால் அத்துணை வசதிகளும் தன்னிடம் கொண்டு உயர்ந்தோன் தாழ்ந்தோன் என சாதிப்பாகுபாடு பார்க்கின்றவன் எவ்வளவு தூய்மை உடையவன் ஆயினும் அவன் அகத்தால் அழுக்கு உடையவனே ஆவான். ஆதலால் இந்த உலகினில் ஆண்சாதி, பெண்சாதி என்ற இருசாதிகளை தவிர வேறு சாதியில்லை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.

**தன்னம்பிக்கை**

வாழ்க்கையில் நாம் தடுமாறுகின்ற பொழுதெல்லாம் நம்மை தளரவிடாது தூக்கி நிறுத்துவது தன்னம்பிக்கை மட்டுமே. பலமுறை தோல்வியைத் தழுவினாலும் நம்பிக்கை குறையாது போராடினால் நிச்சயம் ஒருநாள் வெற்றி அடையமுடியும். யார் நம்மீது நம்பிக்கை வைக்கிறார்களோ இல்லையோ நாம் நம்மீது நம்பிக்கை வைத்தால் போதும். அதுவே வெற்றிக்கு வழிகாட்டும். இத்தகைய நம்பிக்கையின் சிறப்பினை தூரன் அவர்கள்,

**"பொறு மனமே பொறு**
**இருளென்றும் நில்லாது**
**மறுகணமே ஒளிவரலாம்**
**பொறுமனமே பொறு**
**தளராதே திடங் கொள்வாய்**
**வளர்தீக்கும் முடிவுண்டு**
**புளிமாங்காய் தீங்கனியாம்**
**பொறுமனமே பொறு"[5]**

என்ற கவிதை வரிகளில் இருள் என்றும் நிலைப்பதில்லை ஒளி மறுகணமே வந்துவிடும் என்றும், தளர்ந்து போகாது திடமாய் இருக்க வேண்டும் என்றும் பொறுமை கொள்ள மனதை வேண்டுகிறார். போட்டிகள் நிறைந்த உலகில் வெற்றி, தோல்வி எல்லாம் இயல்பான ஒன்று. வாழ்வில் வெற்றி என்ற இலக்கை அடைய பல தோல்விகளை கடந்து வந்துதான் ஆகவேண்டும். தோல்வியுறும் போதெல்லாம் துவண்டு போகாது தன்னம்பிக்கையோடு இலக்கை நோக்கி தொடர்ந்து முன்னேறினால் வெற்றி நம் வசமே.

**துணிவுவேண்டும்**

'துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால் மட்டம்' என்பார்கள். ஒரு செயலில் இறங்கி செயல்பட வேண்டுமென்ற துணிவு மட்டும் வந்துவிட்டால் மலைமீது ஏறுவது கூட மளைப்பாகத் தெரியாது. தமிழர்களின் ஆட்சியும் புகழும் உலகம் முழுவதும் பரவியிருக்க அவர்களின் வீரமும் துணிவுமே காரணமாகும். துணிச்சலுடன் போராடியதாலே நாம் இன்று சுதந்திர இந்தியாவின் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய துணிவின் அருமையை,

**"கச்சைகட்டி மார்தட்டிக்**
**கண்களிலே ஒளிவீசத்**
**துச்சமெனப் பயந்தள்ளித்**
**துணிவுடனே புறப்படுவாய்"[6]**

என்ற கவிதை வரிகளில் கச்சைக்கட்டி மார்தட்டி கண்களில் ஒளிவீச பயத்தினை புறம் தள்ளி துணிவுடன் புறப்பட சொல்கின்றார். மேலும்,

**"அச்சம் நீங்கித் தயக்கமும் தள்ளி நீ**
**ஆண்மை யோடுமு யன்றிடும் போதினில்**
**துச்சமாகும் எதிர்ப்பும் பகைமையும்**
**தோழ ராகப் பலர்வந்து கூடுவார்**
**மெச்சியுன்றன் பணியில் சேருவார்"[7]**

என்ற கவிதை வரிகளில் அச்சத்தினை நீக்கி தயக்கம் நீக்கி துணிவோடு போராடினால் எதிர்ப்பும் பகையும் நீங்கும் என்றும், பலரும் தோழன் என்று வந்து சேருவர் என்றும் கூறுகின்றார். இதே கருத்தைதான் கவிஞர் வாணிதாசனும்,

**"அஞ்சாதே தமிழா! நீ**
**அஞ்சாதே தமிழா!**
**தஞ்சமென ஒருநாளும் பிறர்க்கீழ்த்**
**தலை சாய்த்திடு வழக்கம்**
**நஞ்சினும் கொடிதென நெஞ்சத்தில் காத்தான்**
**நம் நாட்டுத் தமிழன்"[8]**

என்ற கவிதை வரிகளில் தமிழர்கள் யாருக்கு கீழும் தஞ்சம் என்று தலை சாய்த்தது இல்லை. அத்தகு செயல்களை இழிவாக கருதினர். அதனால் அஞ்சாது இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறார். இதன்மூலம் எடுத்த காரியத்தை செவ்வெனே செய்து முடிக்க துணிவு அவசியம் என்பதையும், தோல்விக்கு காரணமான தயக்கத்தை நீக்கி துணிவோடு போராடினால் தோல்வியும் நம்மிடம் தோற்றுப் போகும் என்பதும் திண்ணம்.

## முடிவுரை

கவிஞர் பெ.தூரன் அவர்கள் பாரதியார் பாரதிதாசன் போன்ற சான்றோர்களின் வழிவந்த ஒரு கவிஞர் ஆவார். இவர் பன்முகம் கொண்டு பல்வேறு படைப்புகளும் எழுதியுள்ளார். இவரது படைப்புகள் யாவும் பல்வேறு சமூகச் சிக்கல்களை எடுத்தியம்புகின்றன. இவரது நடையில் இனிமையும் எளிமையும் இழையோடி மிளிர்வதோடு மட்டுமல்லாது எதிர்வருகின்ற இளம் சமுதாயத்திற்கும் எண்ணற்ற நல்ல கருத்துக்களை எடுத்தியம்பி அவர்களை நல்வழிப்படுகின்றன என்பது இவ்வாய்வின் வழி திண்ணமாகின்றது.

## அடிக்குறிப்பு

1) தூரன் கவிதைகள், பெ.தூரன், பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை – 1, பக்கம்-18
2) பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசன், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை- 600035, பக்கம் - 408.
3) தூரன் கவிதைகள், பெ.தூரன், பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை – 1, பக்கம் - 248.
4) மேலது, பக்கம் - 218.
5) மேலது, பக்கம் - 166.
6) மேலது, பக்கம் - 17.
7) மேலது, பக்கம் - 93.
8) வாணிதாசன் கவிதைகள் (தொகுதி – 2), பக்கம் - 13.